வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 07 13.05.2026 புதன்கிழமை இதழ் : 127 பக்கங்கள் : 08


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria நியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# ஜனாதிபதியின் மே தின உரை; ஐ.நாவில் எதிரணி முறைப்பாடு

## மனோ, ஜீவன் உட்பட 24 எம்.பிக்கள் கையொப்பம்

கொழும்பு, மே.13

**மே தின பேரணியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆற்றிய உரையால், நீதித்துறை சுதந்திரத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று, ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாட்டுக் கடிதம் ஒன்றை சமர்ப்பித்துள்ளது.**

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மனோ கணேசன், இராதாகிருஷ்ணன், ஜீவன் தொண்டமான், ரஞ்சித் மத்தும பண்டார, தயாசிறி ஜயசேகர, உள்ளிட்ட 24 எதிர்க்கட்சிப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த முறைப்பாட்டில் கையெழுத்திட்டுள்ளனர்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்கள் சுதந்திரம் தொடர்பான சிறப்பு அறிக்கையாளருக்கு இந்த முறைப்பாட்டுக் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாட்டுக் கடிதத்தில்,

"2026 மே 1 திகதி சர்வதேச அனைத்துலக தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பொதுப் பேரணியின் போது, ஜனாதிபதி, 2026 மே 25 ஆம் திகதிவழங்கப்படவிருக்கும் ஒரு நீதித்துறைத் தீர்ப்பு குறித்துப் பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டவுடன், பொதுமக்கள் அதனை "கைதட்டி வரவேற்க" முடியும் என்று தமது உரையில் குறிப்பிட்டார்.

07

# திருமலையில் இடம்பெற்ற சிசு மரணம் தொழிற்சங்கப் போராட்டத்தால் அல்ல!

## வைத்திய அதிகாரிகள் சங்கம் விளக்கம்

கொழும்பு, மே. 13

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையில் இடம்பெற்ற சிசு மரணமானது, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தொழிற்சங்க போராட்டத்தினால் ஏற்பட்டதல்ல என்றும், இது குறித்து தவறான கருத்துக்களை பகிரப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அச்சங்கம் மேற்படி விடயம் தொடர்பில் விசேட ஊடக அறிக்கை ஒன்றை விடுத்து இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் 9 ஆம் திகதி திருகோணமலை வைத்தியசாலையின் பிரசவ அறையில் இடம்பெற்ற சிசு மரணம் தொடர்பில் செய்தி வெளியாகியுள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் காலப் பகுதியிலும் அவசர சிகிச்சைப் பிரிவுகள், தீவிர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் பிரசவ அறைகளின் செயற்பாடுகள் எவ்வித தடையுமின்றி முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான ஆலோசனைகளைத் தமது கிளைச் சங்கங்களுக்குத் தொடர்ச்சியாக வழங்கி வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக மகப்பேறு வைத்தியசாலைகள்,

07

# இந்திய நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி

கொழும்பு, மே. 13

இந்திய அரசின் ரூ. 600 மில்லியன் நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் நான்கு மாடிகளைக் கொண்ட மருத்துவ விடுதி வளாகத்தை நிர்மாணிப்பதற்காக கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் பதில் செயலாளர் டாக்டர் டபிள்யூ.கே. விக்கிரமசிங்க ஆகியோர்

07

# யாழ். பல்கலை மாணவர்களினால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், மே. 13

முள்ளிவாய்க்கால் நினைவேந்நல் வாரம், யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை, ஆலடியில், நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இறுதி யுத்தத்தின்போது கொல்லப்பட்ட மக்களை நினைவு கூர்ந்து, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், முள்ளிவாயக்கால் நினைவுக் கஞ்சியும் காய்ச்சி பரிமாறப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவு நாளான மே- 18

07

# சட்டம் அனைவருக்கும் சமம்! ஜனாதிபதி அதிரடி அறிவிப்பு

கொழும்பு, மே. 13

தமது பதவிகளைப் பொருட்படுத்தாது, நாட்டின் சட்டத்திற்கு அனைவரும் கீழ்ப்படிய வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

மாத்தளையில் நேற்று நடைபெற்ற விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு அந்தஸ்தையும் பாராது, தவறு

07

# யாழ்.திருவள்ளுவர் கலாசார நிலையத்தின் முகாமைக்கு நம்பிக்கை பொறுப்பு நிதியம்!

கொழும்பு, மே. 13

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையத்தின் முகாமைத்துவப் பணிகளை மேற்கொள்வதற்காக 'நம்பிக்கை பொறுப்பு நிதியமொன்றை' நிறுவுவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

நேற்று முன் தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போதே இதற்கான தீர்மனம் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையின் கலாசார செயற்பாடுகளின் மையமாகவும் யாழ்ப்பாணத்தின் கலாசார மரபுரிமைகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் மற்றும் போற்றிப் பேணுவதற்குமான இருதரப்பு ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்தும் நோக்கில், இந்திய அரசின் நிதியுதவியுடன் 11 மாடிகளைக் கொண்ட

07

# அரசின் ஊழல்களை வெளிப்படுத்துவதால் எனக்கு திட்டமிட்ட வகையில் நெருக்கடிகள்!

## கூறுகிறார் உதய கம்மன்பில



கொழும்பு, மே. 13

அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளை வெளிப்படுத்துவதால் திட்டமிட்ட வகையில் நெருக்கடிக்குள்ளாகியுள்ளேன். வாக்குமூலமளிக்க ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களுக்கும் அழைக்கப்படுகிறேன் என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

07

# கிளிநொச்சி திருவையாறில் அநாதரவாக மீட்கப்பட்ட கார்



கிளிநொச்சி, மே. 13

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருவையாறு பகுதியில் சந்தேகத்திற்கிடமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றை

07

# துயரத்தை விதைக்கும் ஆட்சியே இன்று உள்ளது!

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



கொழும்பு, மே. 13

மக்களுக்கு விரோதமான, மக்களின் துன்பத்தை புரிந்து கொள்ளாத, மக்களை பழிவாங்கும் அரசாங்கமே இன்று நாட்டில் காணப்படுகின்றது. மகிழ்ச்சிக்குப் பதிலாக துயரத்தை விதைக்கும் மக்கள் விரோத

07

# மக்களின் இதயங்களையே மகிந்த கொள்ளையடித்தார்!

கொழும்பு, மே. 13

"மகிந்த ராஜபக்ஷ திறைசேரியில் கொள்ளை அடிக்கவில்லை. மாறாக மக்கள் மனங்களையே கொள்ளையடித்துள்ளார்." - என்று மஹிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய எயர்பஸ் கொடுக்கல், வாங்கல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச விடம், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நேற்று வாக்குமூலத்தை பதிவு செய்தது.

சுமார் இண்டரை மணிநேர விசாரணையின்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சார சபை மறுசீரமைப்பு:

# 1,896 ஊழியர்களுக்கு நட்டஈடு வழங்க 8.5 பில்லியன் ரூபா அரசால் ஒதுக்கீடு!

கொழும்பு, மே. 13

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து, விருப்ப ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கான நட்டஈட்டுத் தொகையை வழங்குவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த வலுசக்தி அமைச்சர் அனுர கருணாதிலக, விருப்ப ஓய்வுத் திட்டத்தின் கீழ் வெளியேறும் 1,896 ஊழியர்களுக்காக மொத்தம் 8.5 பில்லியன் ரூபா தேவைப்படுவதாகத் தெரிவித்தார்.

மறுசீரமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட புதிய நிறுவனங்களின் நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டு, இந்த நட்டஈட்டுத் தொகையை வழங்குவதற்குத் திறைசேரி நேரடிப் பங்களிப்பை வழங்கவுள்ளது.

அமைச்சரின் கூற்றுப்படி, நட்டஈட்டுத் தொகை பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்படும்:

"லங்கா எலக்ட்ரிசிட்டி ஜெனரேஷன் லங்கா" மற்றும் "எலக்ட்ரிசிட்டி டிஸ்ட்ரிபியூஷன் லங்கா" ஆகிய நிறுவனங்களின் ஊழியர்களுக்கான முழு நட்டஈட்டையும் திறைசேரி ஏற்கும்.


"தேசிய அமைப்பு இயக்கி" மற்றும் "தேசிய மின்பகிர்மான வலையமைப்பு சேவை வழங்குநர்" ஆகிய நிறுவனங்களின் ஊழியர்களுக்கான நட்டஈட்டில் 50 வீதத்தைத் திறைசேரி வழங்கும்.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் மிக விரைவில் பெற்றுக்கொள்ளப்படும் என அமைச்சர் உறுதிபடத் தெரிவித்தார்.

"ஆரம்பத்தில் இந்த நட்டஈட்டுத் தொகையை மிக விரைவாக வழங்கத் திட்டமிட்டிருந்தோம். இருப்பினும், இலங்கை மின்சார சபையின் தற்போதைய நிதி நெருக்கடி காரணமாக அது தாமதமானது," என அமைச்சர் விளக்கமளித்தார்.

எவ்வாறாயினும், இந்த வாரத்திற்குள் கொடுப்பனவுகளை விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## யாழ்.போதனா வைத்தியசாலையில் தீ; அரச பகுப்பாய்வு குழுவினர் விசாரணை



யாழ்ப்பாணம், மே. 13

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருந்து களஞ்சியசாலையில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பில் கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த அரச பகுப்பாய்வு திணைக்கள விசேட குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

போதனா வைத்தியசாலையின் மருந்து களஞ்சிய சாலையில் கடந்த சனிக்கிழமை அதிகாலை திடீர் தீ விபத்து ஏற்பட்டது. சுமார் 05 மணி நேர தீவிர போராட்டத்தின் பின்னர் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதிலும், களஞ்சியசாலையில் இருந்த பெறுமதியான மருந்துகளில் சுமார் 60 வீதமானவை தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண தடயவியல் பொலிஸார் ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்து, குறித்த பகுதியை குற்ற பிரதேசமாக அறிவித்து, தடயவியல் பரிசோதனைகளை முன்னெடுத்து வரும் நிலையில், கொழும்பில் இருந்து வருகை தந்துள்ள அரச பகுப்பாய்வு திணைக்கள அதிகாரிகளும் சம்பவ இடங்களில் பகுப்பாய்வு சோதனைகளை முன்னெடுத்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## சைபர் குற்றங்களில் ஈடுபடும் வெளிநாட்டவர்கள் விரிவான விசாரணைகளை ஆரம்பித்தது சி.ஐ.டி.!

கொழும்பு, மே. 13

இலங்கையின் பல பகுதிகளில் தங்கியிருந்து இணையவழி நிதி மோசடி மற்றும் சைபர் குற்றங்களில் ஈடுபட்டு வந்த வெளிநாட்டு நபர்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.


கடந்த சில மாதங்களாக கொள்ளுப்பிட்டி, புத்தளம் மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில் இரகசியமான முறையில் இயங்கி வந்த கட்டடங்களைச் சோதனையிட்டபோதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் இணைந்து முன்னெடுத்த இந்த விசேட நடவடிக்கைகளின் போது, சந்தேக நபர்களிடமிருந்து அதிகளவிலான கணினிகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட இலத்திரனியல் சாதனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, சைபர் குற்றங்களுடன் தொடர்புடைய நாடுகள் எவையென அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அந்த நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவருக்கு விமான நிலையத்தில் விசேட பாதுகாப்பு சோதனைகளை முன்னெடுக்க குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அத்துடன், தற்போது நாட்டில் தங்கியிருக்கும் வெளிநாட்டு நபர்கள் குறித்தும் தனியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## முள்ளிவாய்க்கால் நினைவை சுமந்த ஊர்தி பவனி யாழில் நேற்று ஆரம்பம்




யாழ்ப்பாணம், மே. 13

முள்ளிவாய்க்கால் தமிழ் இன அழிப்பின் நினைவை சுமந்த ஊர்திப் பவனி நேற்று செவ்வாய்க்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திலிருந்து காலை 9.00 மணியளவில் ஆரம்பமான இந்த ஊர்திப் பவனியில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதனுடன், முள்ளிவாய்க்கால் போரின் இறுதி நாள்களில் மக்கள் எதிர்கொண்ட பட்டினி மற்றும் மனிதாபிமான அவலங்களை நினைவு கூரும் வகையில் "முள்ளிவாய்க்கால் கஞ்சி" பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.

பெருமளவான மக்கள் அந்த கஞ்சியை பெற்றதுடன், போரால் உயிரிழந்த மக்களை நினைவு கூர்ந்து அமைதியான அஞ்சலியையும் செலுத்தினர். (அ)

## முள்ளிவாய்க்கால் கஞ்சியினை நினைவு கூரும் நிகழ்வு சந்நிதியில்!



யாழ்ப்பாணம், மே. 13

இறுதி யுத்தத்தின்போது தமிழ் மக்கள் உண்டு உயிர் வாழ்ந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியை நினைவு கூரும் நிகழ்வு நேற்று தமிழரசுக் கட்சியினால் தொண்டைமானாறு சந்நிதி முருகன் ஆலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மே 12 தொடக்கம் 18 வரையான ஒரு வார காலப்பகுதி முள்ளிவாய்க்கால் வாரமாக அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், இறுதி யுத்தத்தின்போது முள்ளிவாய்க்காலில் கஞ்சியை மாத்திரம் குடித்து உயிர் வாழ்ந்த தமிழ் மக்கள் அதனை நினைவு கூரும் முகமாக வருடம் தோறும் கஞ்சி சமைத்து பகிர்ந்து உண்ணும் வழக்கம் வடக்கு-கிழக்கு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்றது. இதில் அதிகளவான மக்கள் கலந்து கொண்டு சிரட்டையில் கஞ்சி வாங்கி உண்டு இறுதி யுத்த முள்ளிவாய்க்கால் நினைவை பகிர்ந்து கொண்டனர்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் தலைமையில் பிரதேச உறுப்பினர்கள், பொது மக்கள் கலந்து கொண்டு பொது மக்களுக்கு கஞ்சி வழங்கினர். (அ)

## யாழில் காணிகள் விடுவிப்பு தொடர்பில் வடக்கு ஆளுநர் தலைமையில் ஆராய்வு

வர்த்தமானியை மீள பெறுவது தொடர்பிலும் பேச்சு

யாழ்ப்பாணம், மே. 13

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்கள் மற்றும் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவித்தல் தொடர்பிலும் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட சுமார் 3ஆயிரம் ஏக்கர் காணிகள் தொடர்பில் காணி சுவீகரிப்புச் சட்டம் தொடர்பாக வெளியான வர்த்தமானியை மீள பெறுவது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக்கும் அபிவிருத்திக்கும் சுபீட்சத்துக்குமான மக்கள் மன்றத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும், அபிவிருத்திக்கும் சுபீட்சத்துக்குமான மக்கள் மன்றத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், வட மாகாண மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு சமகாலப் பிரச்னைகள் மற்றும் மாகாணத்தின் அபிவிருத்திச் செயல்பாடுகள் தொடர்பில் குறித்த அமைப்பால் பல முக்கிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு விரிவாக ஆராயப்பட்டன.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்கள் மற்றும் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவித்தல் தொடர்பில் ஆராயப்பட்டது.

குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் விடுவிக்கப்பட்ட சுமார் 3,000 ஏக்கர் காணிகளை மக்கள் சட்டபூர்வமாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையில் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 2-ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தகமானி அறிவித்தலை மீளப்பெற அரசை வலியுறுத்துதல் குறித்துக் கோரப்பட்டது.

அத்துடன், காங்கேசன்துறையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையை இந்து கலாசாரப் பல்கலைக்கழகம் அமைப்பதற்காக வழங்குவது குறித்தும் பேசப்பட்டது. (அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
13.05.2026 புதன்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# விஜய்யின் புதிய அரசியல் கலாசாரம்?

தமிழ்நாட்டின் புதிய முதலமைச்சராக பதவியேற்ற கையோடு ஜோசப் விஜய் மற்றைய அரசியல் கட்சிகளின் தலைவர்களை அவர்களின் வீடுகளுக்கு அல்லது கட்சி அலுவலகங்களுக்கு தேடிச்சென்று சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றுவருகின்றார். கட்சி அரசியல் வன்மத்தில் திளைத்துப் போன திராவிட இயக்கத்தின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் அறுபது வருடங்களாக மாறிமாறி ஆட்சிசெய்த ஒரு மாநிலத்தில் விஜய் அறிமுகப்படுத்த முனைந்து நிற்கும் ஆரோக்கியமான இந்த "புதிய அரசியல் கலாசாரம்" பெரிதாக வரவேற்கப்படுகிறது.

விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் வெற்றியை விமர்சகர்களும் ஊடகங்களும் "அரசியல் நிலநடுக்கம்" என்று வர்ணித்தாலும், தனியாக அரசாங்கத்தை அமைப்பதற்கு தேவையான அறுதிப் பெரும்பான்மை சட்டசபை ஆசனங்கள் அவருக்கு கிடைக்கவில்லை.

ஐந்து நாட்கள் இழுபறியின் பின்னர் காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்டுகள் உட்பட பல சிறிய கட்சிகளின் ஆதரவுடன் அரசாங்கத்தை அமைத்து முதலமைச்சராக விஜய் ஞாயிறன்று பதவியேற்க முடிந்தது. அரசாங்கத்தில் பங்கேற்காமல் அந்த கட்சிகள் வெளியில் இருந்தே ஆதரவளிக்கின்றன.

இந்த கட்சிகள் விஜய்க்கு அளிக்கும் ஆதரவில் ஒரு விசித்திரமான அம்சம் இருக்கிறது. அதாவது, விஜய் தேர்தல் பிரசாரங்கள் பூராவும் "தீயசக்தி" என்று வர்ணித்த திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டு ஓரிரு ஆசனங்களைப் பெற்ற கட்சிகளின் ஆதரவுடன் அவர் அரசாங்கத்தை அமைத்திருப்பதும் கூட, அந்த மாநிலத்தைப் பொறுத்தவரை " புதிய அரசியல் கலாசாரம்" தான்.

திராவிட இயக்க கட்சிகளின் ஆதிக்கத்தை விஜய் தகர்த்துவிட்டார் என்பது அளவுக்கு அதிகமாக மிகைப்படுத்தப்பட்ட ஒரு மதிப்பீடு என்றுதான் சொல்ல வேண்டும். திராவிட இயக்கத்தின் இரு பிரதான கட்சிகளையும் தோற்கடித்து தமிழக வெற்றிக் கழகம் ஆட்சிக்கு வந்திருக்கின்ற போதிலும், தமிழ்நாட்டில் ஆழமாக வேரூன்றியிருக்கும் திராவிடவாதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை ஒரு தேர்தலோடு செல்வாக்கு இழக்கச் செய்வது என்பது எளிதான காரியமல்ல.

விஜய் கூட தனது கட்சியின் கோட்பாடுகள் என்று பிரத்தியேகமாக எதையும் வரையறை செய்யாமல், சமூகநீதி மற்றும் மாநில சுயாட்சி என்ற திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளையே உச்சரித்தார். தி.மு.க.வும் அண்ணா தி.மு.க.வும் தோல்வி கண்டிருப்பதை திராவிடவாதத்தின் தோல்வி என்றும் கூறமுடியாது. ஏனென்றால் அந்த இரு கட்சிகளும் திராவிடவாதத்தின் கோட்பாடுகளை கைவிட்டு "மெகா" ஊழல் கட்சிகளாக மாறி தசாப்தங்கள் கடந்து விட்டன.

அண்ணா முதலமைச்சராக ஒரு வருடம் மாத்திரமே பதவியில் இருந்த நிலையில், மரணமடைந்தார். அவர் உயிருடன் இருந்து பல வருடங்கள் முதலமைச்சராக பதவி வகித்திருந்தால், கருணாநிதி போன்ற தி.மு.க.வின் மற்றைய அரசியல்வாதிகளின் ஊழல் முறைகேடுகளை அவரால் கட்டுப்பத்த முடிந்திருக்கும் என்று கூறமுடியாது.

சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருந்து அரசியல் பதவிகளுக்கு வந்தவர்கள் வசதி வாய்ப்புக்களை கண்டதும் பழைய சிந்தனைகளை எல்லாம் கைவிட்டு "வாழ்க்கையை அனுபவிக்கத்" தொடங்கியதே ஊழல் முறைகேடுகளின் ஊற்றுக்கண்ணாகும். விஜய்யின் கட்சியின் பெரும்பாலான சட்டசபை உறுப்பினர்களும் அவ்வாறு சமூகத்தின் அடிமட்டத்தில் இருந்து வந்தவர்களே. வாழும் முறையால் வழிகாட்டுபவர்களாக அவர்களை மாற்றுவதற்கு வெறுமனே சினிமாப் பாணி வசனங்கள் மாத்திரம் போதாது.

இலங்கையிலும் முன்னைய ஆட்சியாளர்களின் ஊழல் முறைகேடுகளுக்கு எதிராக கிளர்ந்த மக்கள்தான் தேசிய மக்கள் சக்தியை பிரமாண்டமான பாராளுமன்றப் பெரும்பான்மையுடன் ஆட்சியதிகாரத்துக்கு கொண்டுவந்தார்கள். இன்று அந்த அரசாங்கத்தின் மீது ஊழல் முறைகேடுகள் தொடர்பாக பல குற்றச்சாட்டுக்கள் கிளம்பியிருக்கின்றன.

புதிய அரசியல் கலாசாரம் என்று கூறிக்கொண்டு எதிர்க்கட்சிகளின் தலைவர்களின் வீடுகளுக்கு சென்று வருவது சுலபம். ஆனால், ஆட்சிமுறையில் அடிப்படை மாற்றங்களைக்

கொண்டு வருவது என்பது சொல்வதைப் போன்று எளிதானது அல்ல.




# கச்சத்தீவு;
# இக்கட்டான நேரங்களில் விஜய்யும் இதன் பின்னால் ஒளிந்து பாதுகாப்பு தேடுவாரா?

ஒரு அரசியல் கட்சியைத் தொடங்கி இரண்டே ஆண்டுகளில் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றுவது என்பது, மிகவும் பிரபலமான ஒரு திரை நட்சத்திரத்திரம் என்றாலும் கூட, சந்தேகத்திற்கு இடமின்றி ஒரு மிகப்பெரிய சாதனையாகும். எவ்வாறாயினும், தமிழக முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள "தளபதி" விஜய் என்று அழைக்கப்படும் ஜோசப் விஜய் சந்திரசேகர், தற்போது பல சிறிய கட்சிகளின் ஆதரவுடன் சட்டசபையில் அறுதிப் பெரும்பான்மையைப் பலத்தைப் பெற்றிருக்கிறார்.

ஆனால், அவர் ஒரு அரசியல் குழப்பத்தை நோக்கி நகர்வதாகத் தெரிகிறது. நீண்ட பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு, சட்ட சபையில் அவருக்கு ஆதரவளிக்க ஒப்புக்கொண்ட கட்சிகளின் முரண்பாடான கொள்கைகளால் அவருக்குப் பல சிக்கல்கள் காத்திருக்கின்றன.

அந்தச் சிறிய கட்சிகளில் சில தீவிர தமிழ் தேசியவாதக் கொள்கையுடையவை, சில அகில இந்தியக் கொள்கையுடையவை் சில இனவாதக் கட்சிகள், மற்றும் சில கம்யூனிசக் கட்சிகள். மேலும், அவருடைய தேர்தல் வாக்குறுதிகள் மிகவும் கவர்ச்சிகரமானவை (Populist), அவற்றை நீண்ட காலத்திற்கு நிறைவேற்றுவதை கற்பனை செய்து பார்ப்பது கூட கடினம்.

அனைவருக்கும் 200 யூனிட் வரை இலவச மின்சாரம், மாநிலம் முழுவதும் பெண்களுக்கு பேருந்துகளில் இலவசப் பயணம், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆண்டுக்கு ஆறு இலவச சமையல் எரிவாயு சிலிண்டர்கள், போதைப் பொருள் இல்லாத மாநிலம் மற்றும் ஊழலற்ற நிர்வாகம் போன்றவை அவரது முக்கிய வாக்குறுதிகள்.

எவ்வாறாயினும், பதவியேற்பு விழா முடிந்த உடனேயே, முந்தைய மு.க. ஸ்டாலின் அரசாங்கம் அரச கஜானாவை காலியாக்கிவிட்டுச் சென்றுவிட்டது என்று குற்றம் சாட்டியதன் மூலம் அவர் வாக்காளர்களை ஓரளவிற்கு ஏமாற்றமடையச் செய்துள்ளார். விஜய்யின் இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்த ஸ்டாலின், புதிய முதலமைச்சர் இப்போதுதான் நிர்வாகத்திற்குள் நுழைந்துள்ளார் என்றும், வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் உள்ள சவால்களை அவர் இனிமேல்தான் கற்றுக் கொள்வார் என்றும் கூறினார்.

உடனடியாக இல்லாவிட்டாலும், நீண்ட கால அடிப்படையில் தனது கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் சிரமம் ஏற்படும்போது, விஜய் தீவிர தேசியவாதக் கொடியை கையில் எடுப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. தனக்கு முன் இருந்தவர்களைப் போன்றே, விஜய்யும் உண்மையான பொருளாதாரப் பிரச்சினைகளை மறைப்பதற்காக இந்தியாவுக்கும் - இலங்கைக்கும் இடையிலான மீனவர் பிரச்சினை மற்றும் கச்சத்தீவு விவகாரத்தைப் பயன்படுத்தக்கூடும்.

முன்னாள் முதலமைச்சர்களான மு.கருணாநிதி (தி.மு.க.), ஜெயலலிதா ஜெயராம் (அண்ணா தி.மு.க.) ஆகியோர் இந்திய மீனவர்களின் மீன்பிடி உரிமையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அவ்வப்போது இந்தியப் பிரதமர்களுக்குக் கடிதம் எழுதுவதை ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

கடந்த ஆண்டு விஜய்க்கு முதலமைச்சராக இருந்த ஸ்டாலின், மீனவர் பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமரிடம் 11 முறையும், வெளியுறவுத் துறை அமைச்சரிடம் 72 முறையும் கோரிக்கை விடுத்ததாகக் குறிப்பிட்டிருந்தார்.

விஜயும் கூட, தமிழக அரசின் தலைவராக அல்லாமல், வெற்றியை நோக்கி வேகமாக முன்னேறிக்கொண்டிருந்த ஒரு அரசியல் கட்சியின் தலைவராக, கடந்த ஆண்டு இந்தப் பிரச்சினையைக் கையில் எடுத்தார்.

1974 ஆம் ஆண்டில் இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு வழங்கப்பட்ட கச்சத்தீவை மீண்டும் மீட்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் நரேந்திர மோடியிடம் விஜய் கோரிக்கை விடுத்தார். அவரது கருத்துக்குப் பதிலளிப்பது போன்று, இலங்கை ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க சில நாட்களுக்குப் பிறகு கச்சதீவுக்கு விஜயம் செய்தார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான மீனவர் தகராறு என்பது 1960-களின் செய்தித்தாள்களில் கூடக் காணக்கூடிய ஒரு நீண்ட காலப் பிரச்சினையாகும். இருப்பினும், இலங்கை ஆயுதப் படைகளுக்கும், குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட தமிழ் பிரிவினைவாதக் குழுக்களுக்கும் இடையே ஆயுத மோதல்கள் வெடித்த பின்னர், இது ஒரு சிக்கலான பிரச்சினையாக உருவெடுத்தது.

இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்து அத்துமீறி மீன் பிடிப்பதே இந்தப் பிரச்சினையின் மூலக் காரணமாக இருந்தபோதிலும், முரணாக இது தமிழகத் தலைவர்களாலும் மீனவர் அமைப்புகளாலும் தவறாகச் சித்தரிக்கப்படுகிறது. இந்திய மீனவர்களின் பாரம்பரிய உரிமை என்று அவர்கள் இப்போது உரிமை கோருகின்றனர்.

ஒருமுறை, 2015 ஆம் ஆண்டில், அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லிக்கு விஜயம் செய்தபோது, இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களைச் சுட நேரிடும் என்று மறைமுகமாக எச்சரித்திருந்தார்.

பிரிவினைவாதப் போர் முடிவுக்கு வந்த பிறகு, இந்த மீன்பிடி விவகாரம் இரு நாடுகளுக்கும் இடையே ஒரு அரசியல் எரிச்சலாக மாறியது. இந்தியத் தலைவர்களின் இலங்கை விஜயங்களின் போதும், இலங்கைத் தலைவர்களின் இந்திய விஜயங்களின் போதும் இது ஒரு சடங்கு போலப் பேசப்படுகிறது, ஆனால் எந்தத் தொடர் நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை.

இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதன் பின்னணியில் உள்ள காரணம் என்னவென்றால், பிராந்திய ஜாம்பவானான இந்தியாவை இலங்கை பகைத்துக் கொள்ள விரும்பவில்லை என்பதாகும். இந்திய மத்திய அரசோ, தனது வாக்காளர் தளத்தின் ஒரு முக்கிய அங்கமான தமிழ்நாட்டைப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. இதனால், அரசியலில் நெருக்கடி ஏற்படும் காலங்களில் தமிழகத் தலைவர்களுக்கு இது ஒரு "உயிர்காப்பானாக" மாறியுள்ளது.

இருப்பினும், எதிர்காலத்தில் இந்த நிலைவரத்த.ல் பெரிய மாற்றம் ஏற்படும் என்பது சாத்தியமற்றதாகவே தோன்றுகிறது.

**- டெயிலி மிறர்**
**ஆசிரிய தலையங்கம், 12 மே, 2026**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**மே - 13 புதன்கிழமை**
பராபவ வருடம் - சித்திரை 30
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : துவாதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. லேசாக தலை வலிக்கும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும்.

**இடபம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். புது பொருள் வந்து சேரும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி. உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**மிதுனம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் அவர்கள் உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கடகம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். புதிய பாதை தெரியும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பொறுமை தேவைப்படும் நாள்.

**கன்னி**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் புதியசலுகைகள் கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களைகலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். அமோகமான நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**தனுசு**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதுவேலை கிடைக்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமை கிடைக்கும்.

**மகரம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**கும்பம்**
கணவன் மனைவி அன்யோன்யம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். புதிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். திருப்பம் நிறைந்த நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோபிரச்னைவந்துநீங்கும். கவனம்தேவைப்படும்.

### கல்விச் சீர்திருத்தங்கள் வெறும் கண்துடைப்பு

# பழைய பாடத்திட்டத்தினால் 40 இலட்சம் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறி

கொழும்பு, மே 13

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படவுள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்கள் நடைமுறை சாத்தியமற்றவை தற்போதைய அரசாங்கம் எவ்வித முறையான திட்டமிடலும் இன்றி கடந்த கால ஆட்சியாளர்களின் தோல்வியுற்ற திட்டங்களையே மீண்டும் திணிக்க முயற்சிக்கிறது. பழைய பாடத்திட்டத்தால் 40 இலட்சம் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள இலங்கை ஆசிரியர் சங்கக் காரியாலயத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரம் பாராளுமன்ற கல்விச் சீர்திருத்தக் குழு கூடி புதிய கல்விச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவது குறித்துக் கலந்துரையாடியுள்ளது. ஆனால் இந்தப் புதிய சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வரும்போது பாரிய சிக்கல்கள் எழும் என்பது வெளிப்படையானது. தற்போது முன்வைக்கப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் இந்த அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டவை அல்ல. இவை கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் கலாநிதி உபாலி சேரசிங்க போன்றவர்களால் திட்டமிடப்பட்ட பழைய ஆவணங்களாகும். இதையே தற்போதைய அரசாங்கம் எவ்வித மாற்றமும் இன்றி முன்னெடுக்கப் பார்க்கின்றது.

கடந்த அரசாங்கத்தின் திட்டத்தின்படி, இந்தச் சீர்திருத்தங்கள் முறையாகச் செயல்பட்டிருந்தால் 2027 ஆம் ஆண்டில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் சாதாரண தரப் பரீட்சையும், 2028 இல் உயர்தரப் பரீட்சையும் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால், தற்போதைய அரசின் திட்டமிடல் குறைபாட்டால் இவை 2029 மற்றும் 2033 ஆம் ஆண்டுகள் வரை பின் தள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த 6 ஆம் தரத்துக்கான புதிய பாடத்திட்டங்கள் நடைமுறைப்ப டுத்தப்படவில்லை. இது அடுத்த ஆண்டிற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் சாதாரண தரப் பரீட்சை 2030 ஆம் ஆண்டுக்கும், உயர்தரப் பரீட்சை 2034 ஆம் ஆண்டுக்கும் தள்ளிப்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் பாடத்திட்டம் ஒவ்வொரு எட்டு ஆண்டுகளுக்கும் ஒருமுறை மாற்றப்பட வேண்டும். அந்த வகையில் 2015 ஆம் ஆண்டுக்குப் பிறகு 2023 இல் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இன்று வரை அது நடக்கவில்லை. இதனால் சுமார் 40 இலட்சம் மாணவர்கள் காலாவதியான பாடத் திட்டங்களையே கற்று வருகின்றனர். குறிப்பாகத் தகவல் தொழில்நுட்பம் போன்ற பாடங்கள் 2015 ஆம் ஆண்டுக்குரிய தரவுகளையே கொண்டுள்ளன. செயற்கை நுண்ணறிவு போன்ற புதிய தொழில்நுட்பங்கள் உலகில் வேகமாக வளர்ந்து வரும் நிலையில், எமது நாட்டு மாணவர்கள் இன்னும் பழைய விடயங்களையே படித்துக் கொண்டிருப்பது அவர்களின் எதிர்காலத்தைப் பாரிய அளவில் பாதிக்கும்.- என்றார்.

(எ)

# வடக்கிலும் திருகோணமலையிலும் 100 மில்லி மீற்றர் மழை பெய்யும்

கொழும்பு, மே 13

இலங்கைக்கு வடகிழக்கே நிலைகொண்டுள்ள வலுவடைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்னும் அதே பகுதியில் நீடித்து வருகின்றது. இதன் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் நிலவும் மழையுடனான காலநிலை அடுத்த சில நாட்களுக்கு தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் பல பகுதிகளில் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, தென், வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் தற்காலிகமாக வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

கடற்பிராந்தியங்களில் காற்றழுத்த தாழ்வு நிலை நீடிப்பதன் காரணமாக நாட்டைச் சூழவுள்ள கடல் பகுதிகளில் காற்றின் வேகம் வரும் நாட்களில் அதிகரிக்கக் கூடும்.

காற்று மேற்கு திசையிலிருந்தோ அல்லது திசை மாறியோ வீசக்கூடும். காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 25-35 கிலோமீற்றர் வரை காணப்படும்.

காலியிலிருந்து மாத்தறை ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பிராந்தியங்களில் காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு 50 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும்.

காலியிலிருந்து அம்பாந்தோட்டை வரையான கடல் பகுதி அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். ஏனைய கடல் பகுதிகள் மிதமான நிலையில் இருக்கும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது தற்காலிகமாகப் பலத்த காற்று வீசுவதுடன், கடல் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும். எனவே, கடற்படை மற்றும் மீனவச் சமூகத்தினர் இது குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் வழங்கும் அறிவிப்புகளை கவனிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(எ)

# உரத் தட்டுப்பாட்டினால் விவசாயிகள் பாதிப்பு உதவாத சதைப்பிண்டங்களாக அமைச்சர்கள்

கொழும்பு, மே 13

நாட்டின் விவசாய சமூகம் உரத் தட்டுப்பாட்டினால் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வரும் நிலையில், விவசாயிகளின் பிரச்னைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதை விடுத்து, ஊடகங்கள் மற்றும் சமூக ஆர்வலர்களை குற்றப்புலனாய்வு திணைக்களம் மூலம் ஒடுக்குவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக தேசிய விவசாய ஒற்றுமை ஒன்றியத்தின் தலைவர் அனுராத தென்னக்கோன் கடும் கண்டனம் தெரிவித்தார்.

தேசிய விவசாய ஒற்றுமை காரியாலயத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போதைய விவசாய அமைச்சரும், அவரது பிரதி அமைச்சரும் விவசாயிகளின் சாபமாகவே உருவெடுத்துள்ளனர். இவர்களை நாம் அமைச்சர்கள் என்பதை விட, எதற்கும் உதவாத சதைப்பிண்டங்கள் அல்லது வெற்றுச் சிலைகள் என்றே அழைக்க வேண்டியுள்ளது. நாட்டில் போதியளவு உரம் இருப்பதாக இவர்கள் மேடைகளில் வீரவசனம் பேசுகின்றனர். ஆனால், கள யதார்த்தம் முற்றிலும் வேறானது. உரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமல் விவசாயிகள் இன்றும் வீதிகளில் அலைந்து கொண்டிருக்கின்றனர்.- என்றார்.

(எ)

# நிலவும் சீரற்ற காலநிலையால் இதுவரையில் 149 பேர் பாதிப்பு

**அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம்**

கொழும்பு, மே 13

குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் தாக்கம் காரணமாக நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலையால் 37 குடும்பங்களை சேர்ந்த 149 பேர் இதுவரையில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 10 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் ஒரு வீடு முழுமையாக சேதமடைந்துள்ளது எனவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



# சைபர் குற்றங்கள் தொடர்பில் 198 வெளிநாட்டு பிரஜைகள் கைது

கொழும்பு, மே 13

கணினி குற்றங்களில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில், 198 வெளிநாட்டு பிரஜைகள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

காலி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கல்வடுகொட பகுதியில் நேற்று முன்தினம் பொலிஸார் முன்னெடுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கையில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த 110 இந்திய பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் 19 முதல் 35 வயதிற்கு இடைப்பட்டவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

அவர்களிடமிருந்து 58 கணினிகள், 79 தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், காலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, ஹிக்கடுவ பொலிஸ் பிரிவிற்கு உட்பட தொடந்துவ பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் கணினி குற்றங்களில் ஈடுபட்டதாக 35 இந்திய பிரஜைகளும் 20 நேபாள பிரஜைகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கிய விடுதியின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

20 முதல் 48 வயதிற்கு இடைப்பட்ட சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 25 கணினிகள், தொலைபேசிகள், 750,000 ரூபாய் பணம், கார் மற்றும் ஜீப் வாகனம் ஒன்றும் பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

இதேநேரம் மிதிகம பொலிஸ் பிரிவில் பிங்வத்தை பகுதியில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் தங்கியிருந்த 28 இந்திய பிரஜைகளும் 05 நேபாள பிரஜைகளும் பொலிஸார் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

25 முதல் 35 வயதிற்கு இடைப்பட்ட சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உரிய விசாயின்றி தங்கியிருந்தமை, சட்டவிரோத சிகரெட்கள் வைத்திருந்தமை மற்றும் கணினி குற்றங்களின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# உடவலவ நீர்த்தேக்கத்தில் பாரிய மீன் அறுவடை

இரத்தினபுரி, மே 13

இரத்தினபுரி மாவட்டத்தின் எம்பிலிபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உடவலவ நீர்த்தேக்கத்தில் கடந்த 09 மற்றும் 10 ஆகிய இரண்டு நாட்களில் மாத்திரம் 35,000 கிலோ கிராமிற்கும் அதிகமான பாரிய மீன் அறுவடை கிடைத்துள்ளது என்று இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

அறுவடை செய்யப்பட்ட இந்த மீன்களின் மொத்த பெறுமதி ஒரு கோடியே ஒன்பது இலட்சத்து 9393 ரூபாய் ஆகும்.

பலாங்கொடை உள்ளிட்ட உடவலவ நீர்த்தேக்கத்தின் மேல் நீரேந்துப் பகுதிகளில் பெய்த கடும் மழையினால் வலவே ஆற்றின் நீர்மட்டம் உயர்ந்தமையே இந்தச் சாதனை அளவிலான அறுவடைக்கு பிரதான காரணமாகும். இதில் கட்லா மற்றும் திலாப்பியா ஆகிய மீன் வகைகள் அடங்குகின்றன.

அறுவடை செய்யப்பட்ட மீன்களில் கணிசமான அளவு கருவாடு உற்பத்திக்காக நீர்கொழும்பு பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பிரதேசத்தைச் சேர்ந்த 313 மீனவர்கள் நேரடி பொருளாதார நன்மைகளைப் பெற்றுள்ளதுடன், சுமார் 1650 பேர் மறைமுக வேலைவாய்ப்புகளை பெற்றுள்ளனர். குறைந்த விலையில் தரமான மற்றும் புதிய நன்னீர் மீன்களை நுகர்வோரால் பெற்றுக்கொள்ள முடிவதுடன், பிரதேச மக்களின் புரதத் தேவையினைப் பூர்த்தி செய்யவும் இது பெரும் பக்கபலமாக அமைந்தது.

நன்னீர் மீன்பிடித்துறையை மேலும் ஊக்குவிக்கும் நோக்கில் இவ்வருடத்தில் மொத்தமாக 24 இலட்சம் நன்னீர் மீன் குஞ்சுகளை உடவலவ நீர்த்தேக்கத்தில் விடுவதற்கு தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை திட்டமிட்டுள்ளது.

நாட்டின் நன்னீர் மீன்பிடித்துறையை வலுப்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தையும் ஊட்டச்சத்து மட்டத்தையும் மேம்படுத்துவதே அரசாங்கத்தின் பிரதான எதிர்பார்ப்பாகும் என அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.(எ)

# மூடப்பட்டிருந்த தெனியாய பாடசாலைகள் மீள திறப்பு

கொழும்பு, மே 13

காய்ச்சல் பரவல் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த தெனியாய கல்வி வலய பாடசாலைகளை இன்று முதல் மீண்டும் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தென் மாகாண ஆளுநரின் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தென் மாகாண கல்விச் செயலாளர் நிஷாந்த பத்திரண தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களிடையே காய்ச்சல் பரவியதையடுத்து, தெனியாய கல்வி வலயத்திலுள்ள 4 பாடசாலைகள் கடந்த வியாழக்கிழமை முதல் தற்காலிகமாக மூடப்பட்டன.

குறித்த பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 56 மாணவர்கள் இந்தக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்ததாக சுகாதாரப் பிரிவினர் குறிப்பிட்டிருந்தனர்.

தற்போது சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் பாதுகாப்பான சுகாதாரச் சூழல் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், நீரைப் பயன்படுத்தும் போது மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தென் மாகாண கல்வி செயலாளர் மேலும் தெரிவித்தார்.

(எ)

# மின்கட்டண உயர்வை அரசாங்கம் உடனடியாக கைவிட வேண்டும்

## தேசிய தொழில் முனைவோர் அமைப்பு

கொழும்பு, மே 13

திங்கட்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் 180 அலகுகளுக்கு மேல் மின்சாரத்தை பயன்படுத்தும் நுகர்வோருக்கு 11 சதவீதத்தினால் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானமானது நாட்டின் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் துறையினருக்கு பாரிய அடியாகும் என்று தேசிய தொழில் முனைவோர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் தலைவர் புஸ்பகுமார கருணாரத்ன தெரிவிக்கையில்

இந்த ஆண்டில் மட்டும் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படும் 3 அல்லது 4 ஆவது சந்தர்ப்பமாகும். ஏற்கனவே பொருளாதார நெருக்கடியால் வீழ்ச்சியடைந்துள்ள உள்நாட்டு கைத்தொழில்கள் இந்த மேலதிக சுமையினால் முற்றாக முடங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டண உயர்வு காரணமாக உற்பத்தி செலவு அதிகரிக்கும் என்பதால் பொருட்களின் விலைகளை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்படும். இதன் விளைவாகப் பொதுமக்கள் பொருட்களை வாங்குவது குறையும் சந்தர்ப்பத்தில் கைத்தொழிற்சாலைகளை நிரந்தரமாக மூட வேண்டிய நிலை ஏற்படும். இதனால் பெருமளவானோர் வேலைவாய்ப்புகளை இழந்து வீதிக்கு வரும் அபாயம் உள்ளதோடு பலர் நாட்டை விட்டு வெளியேறும் நிலையும் உருவாகும்- என்றார்.

(எ)

# தலைக்கவசமின்றி மோ. சைக்கிள் செலுத்திய யுவதி கைதானார்!

கொழும்பு, மே 13

பாதுகாப்பு தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூன்று யுவதிகளின் வீடியோ கடந்த சில நாட்களாக சமூக வலைத்தளங்களில் பரவி வந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசேட விசாரணையை ஆரம்பித்திருந்த நிலையில், அதில் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் மற்றும் மூன்று சந்தேகநபர்களையும் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, குறித்த மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற யுவதியை புத்தல பொலிஸார் கைது செய்துள்ளனர். இதேவேளை மோட்டார் சைக்கிளையும் பறிமுதல் செய்தனர்.

(எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருகோணமலை சிசு மரணம் எமது போராட்டத்தால் அல்ல!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மறுப்பு

திருகோணமலை, மே 13

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையில் இடம்பெற்ற சிசு மரணமானது, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தொழிற்சங்க போராட்டத்தினால் ஏற்பட்டதல்ல என்றும் இது குறித்து தவறான கருத்துக்கள் பகிரப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அச்சங்கம் மேற்படி விடயம் தொடர்பில் திங்கட்கிழமை விசேட ஊடக அறிக்கை ஒன்றை விடுத்திருந்தது.

கடந்த ஏப்ரல் 9 ஆம் திகதி திருகோணமலை வைத்தியசாலையின் பிரசவ அறையில் இடம்பெற்ற சிசு மரணம் தொடர்பில் ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் காலப்பகுதியிலும் அவசர சிகிச்சைப் பிரிவுகள், தீவிர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் பிரசவ அறைகளின் செயற்பாடுகள் எவ்வித தடையுமின்றி முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான ஆலோசனைகளைத் தமது கிளைச் சங்கங்களுக்குத் தொடர்ச்சியாக வழங்கி வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக மகப்பேறு வைத்தியசாலைகள், சிறுவர் வைத்தியசாலைகள்இ புற்றுநோய் மற்றும் சிறுநீரக சிகிச்சை நிலையங்களின் சேவைகள் எக்காரணம் கொண்டும் பாதிக்கப்படாமல் இருப்பதை சங்கம் உறுதி செய்துள்ளது. இவ்வாறான நிலையில், குறுகிய அரசியல் நோக்கங்களை முன்னிலைப்படுத்தி, வைத்தியர்களின் தொழிற்சங்கப் போராட்டமே இந்தச் சோக மான சம்பவத்துக்குக் காரணம் என குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருவதாக அச்சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

இந்தச் சிசு மரணம் தொடர்பில் முறையான தொழில்நுட்ப அறிவும் அனுபவமும் கொண்ட நிபுணர் குழுவைக் கொண்டு சுதந்திரமான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்குமாறு சுகாதார அமைச்சிடம் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இவ்வாறான முறையான விசாரணைகளுக்குத் தமது சங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாகவும், உண்மை நிலையை வெளிக்கொண்டு வருவதே தமது நோக்கம் என்றும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ)

## அஸர்பைஜானிலிருந்து கொண்டுவரப்பட்ட
# படுவத்தே சாமரவை 72 மணிநேரம் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி

கொழும்பு, மே 13

அஸர்பைஜானில் வைத்து கைது செய்யப்பட்ட பாதாள உலகக் குழு உறுப்பினரும் பாரியளவான போதைப்பொருள் கடத்தல்காரருமான படுவத்தே சாமர எனப்படும் மனோஜ் சுரங்க, ஞாயிற்றுக்கிழமை இரவு நாட்டுக்கு கொண்டுவரப்பட்டார்.

இந்த நிலையில் சந்தேக நபரை 72 மணிநேர தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அரச புலனாய்வு பிரிவு மற்றும் அஸர்பைஜான் புலனாய்வு பிரிவு இணைந்து மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் மூலம், அந்நாட்டில் தலைமறைவாக இருந்த 48 வயதான மனோஜ் சுரங்க என்ற "படுவத்தே சாமர" கைது செய்யப்பட்டார்.

இவரை அழைத்து வருவதற்காக கடந்த 7ஆம் திகதி அஸர்பைஜான் சென்றிருந்த குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் குழு, இந்தியா ஊடாக சந்தேகநபரை நாட்டுக்கு கொண்டு வந்தனர். கட்டுநாயக்க விமான நிலையத்தை அவர் வந்தடைந்த போது பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், மேலதிக விசாரணைகளுக்காக அவர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

ராகம, படுவத்தை பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர், நீண்ட காலம் டுபாயில் மறைந்திருந்துள்ளதுடன், சுமார் ஒரு வருடத்துக்கு முன்னரே அஸர்பைஜானுக்குத் தப்பிச் சென்றுள்ளார். மேலும் பாதாள உலகம் குழு தலைவர்களான கணேமுல்ல சஞ்சீவ கெஹெல்பத்தர பத்ம மற்றும் கமாண்டோ சலிந்த ஆகியோருடன் நெருங்கிய தொடர்புகளை பட்டு வந்தே சாமர பேணி வந்துள்ளதாகவும் பாரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களை முன்னின்று நடத்தியதாக இவர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

மேலும் சந்தேக நபர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளில் கடந்த 2020 டிசெம்பர் 6ஆம் திகதி பொலிஸ் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட 100 கிலோ ஹெரோயின் மற்றும் 100 கிலோ "ஐஸ்" போதைப்பொருள் கடத்தலை டுபாயில் இருந்தவாறே சந்தேக நபர் வழிநடத்தியமை தெரிய வந்துள்ளது. அத்துடன் 2023 டிசெம்பர் 31 திகதி அன்று கிராண்ட்பாஸ் பகுதியில் போதைப்பொருள் தகராறு காரணமாக நபரொருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் 2024 ஜூலை 25 திகதி அன்று அதே பகுதியில் பெண் ஒருவரும் ஓட்டோ சாரதியும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவங்களை இவரே திட்டமிட்டுள்ளார்.

மேலும் கணேமுல்ல சஞ்சீவவை கொலை செய்வதற்காக துப்பாக்கிகளை வழங்கியமை துசித ஹல்லொலுவ மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் 2024 டிசெம்பர் 13 திகதி அன்று கந்தானையில் உள்ள பாதாள உலக உறுப்பினர் ஒருவரின் வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியமை போன்ற சம்பவங்களிலும் படுவத்தே சாமர தொடர்புபட்டுள்ளமை விசாரணை அதிகாரிகளால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரின் பொறுப்பில் உள்ள இவரை, 72 மணிநேர தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் வைத்துஇ அவர் தொடர்புபட்ட ஏனைய குற்றங்கள் மற்றும் பாதாள உலககுழு வலையமைப்புகள் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## கணினி குற்றங்களில் ஈடுபட்ட மேலும் 54 வெளிநாட்டினர் கைது

கொழும்பு, மே 13

கணினி குற்றங்களில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில், ஹிக்கடுவாவில் உள்ள ஒரு சுற்றுலா விடுதியில் திங்கட்கிழமை சிறப்பு அதிரடிப்படையினரால் 54 வெளிநாட்டினர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 35 இந்தியர்களும் 19 நேபாள பிரஜைகளும் அடங்குவர்.

கணினி குற்றங்களுக்காக ஹிக்கடுவாவின் டொடண்டுவ பகுதியில் ஒரு வெளிநாட்டினர் குழு தங்கியிருப்பதாக பூசா இராணுவ முகாமில் உள்ள புலனாய்வு அதிகாரிகளுக்கு சமீபத்தில் தகவல் கிடைத்தது.

இதன்படி, சிறப்பு அதிரடிப் படையின் தென் மாகாண சிறப்பு அதிரடிப் பிரிவும் ஹிக்கடுவ காவல்துறையும் இணைந்து திங்கட்கிழமை பிற்பகல் ஒரு சிறப்பு நடவடிக்கையை தொடங்கின.

அப்போது கணினிக் குற்றங்களில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில், ஹிக்கடுவ பொலிஸ் பிரிவின் டொடண்டுவவில் உள்ள ஒரு சுற்றுலா விடுதியில் 54 வெளிநாட்டினர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட வெளிநாட்டினரில் 35 இந்தியர்களும் 19 நேபாளியர்களும் அடங்குவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவர்களிடமிருந்து சுமார் இருநூறு தொலைபேசிகள் மற்றும் 25 மடிக்கணினிகளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

சந்தேக நபர்கள் குறித்த மேலதிக விசாரணைகளை ஹிக்கடுவ பொலிஸ் மற்றும் கணினி குற்றப் புலனாய்வு பிரிவு மேற்கொண்டு வருகின்றது. (எ)

## 16 பிரதான நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் நேற்று திறப்பு

கொழும்பு, மே 13

16 பிரதான நீர்த்தேக்கங்களும் 10 நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களும் தற்போது வான்பாய்ந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.டி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தின் இராஜாங்கனை நீர்த்தேக்கம், பதுளை மாவட்டத்தின் சொரபொர நீர்த்தேக்கம், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் வீரவில, லுணுகம்வெஹெர, வெஹெரகல நீர்த்தேக்கங்கள், குருநாகல் மாவட்டத்தின் மாகல்ல, தெதுறு ஓயா நீர்த்தேக்கம் மற்றும் கண்டி மாவட்டத்தின் வாமெடில்ல, நாலந்த நீர்த்தேக்கங்களும் மொனராகலை மாவட்டத்தின் அலிகொட்டஆர நீர்த்தேக்கமும் இவ்வாறு வான்பாய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கலா ஓயா வடிநிலப் பகுதியில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக, அந்த வடிநிலத்தில் அமைந்துள்ள இராஜாங்கனை, தேவஹூவ, வெமெடில்ல ஆகிய நீர்த்தேக்கங்கள் வான்பாய்ந்து வருவதாக எஸ்.டி. ஹேரத் தெரிவித்தார்.

இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 12 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் ஊடாக வினாடிக்கு 18,500 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது.

அதேபோல்இ கிரிந்தி ஓயா வடிநிலப் பகுதியில் பெய்த பலத்த மழை காரணமாக அந்த வடிநிலத்திலுள்ள லுணுகம்வெஹெர, திஸ்ஸவாவி, வீரவில, யோத வாவி மற்றும் அலிகொட்ட ஆர ஆகிய நீர்த்தேக்கங்களும் தற்போது வான்பாய்ந்து வருவதாகப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

லுணுகம்வெஹெர நீர்த்தேக்கத்தின் 6 வான்கதவுகள் தற்போது திறக்கப்பட்டுள்ளதுடன், வினாடிக்கு 7,100 கன அடி நீர் வெளியேற்றப்படுகின்றது.

மேலதிகமாக, வெஹெரகல நீர்த்தேக்கத்தின் 6 வான்கதவுகள் திறக்கப்பட்டு, வினாடிக்கு 2400 கன அடிக்கும் அதிகமான நீர் மாணிக்க கங்கைக்குள் வெளியேற்றப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

வான்பாயும் நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களில் அங்கமுவ, போபுருஎல்ல, மஹாசியம்பலாங்கமுவ, சத்தாதிஸ்ஸ, மாலிம்பொத்த மற்றும் மருதமடு ஆகிய நீர்த்தேக்கங்கள் அடங்கும்.

தொடர்ந்து பெய்யும் மழையினால் வான்கதவுகள் ஊடாக வெளியேற்றப்படும் நீரின் அளவு வரும் நாட்களில் மாற்றமடையக்கூடும் என்பதால் நீர்த்தேக்கங்களை சூழவுள்ள பகுதிகளிலும் தாழ்நிலப் பகுதிகளிலும் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு டி. ஹேரத் அறிவுறுத்தியுள்ளார். (எ)

## சாய்ந்தமருது மீனவர்கள் படகுகளுடன் போராட்டம்

சாய்ந்தமருது, மே 13

கடல் கொள்ளைக்கு தீர்வு கோரி நேற்று எதிர்ப்பு தெரிவித்து சாய்ந்தமருது பகுதி மீனவர்கள் படகுகளுடன் வீதியில் இறங்கி கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து இடம்பெற்று வரும் கடல் வள கொள்ளை மற்றும் வெளிமாவட்ட மீனவர்களின் சட்டவிரோத அத்துமீறிய கொள்ளை நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குறிப்பிட்டனர்.

"எமது கடல் வளங்களை பாதுகாக்க வேண்டும்", "உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றுங்கள்", "சட்டவிரோத கடல் கொள்ளையை உடனடியாக நிறுத்துங்கள்" போன்ற கோசங்களை வெளியிட்டு மீனவர்கள் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

போராட்டத்தில் கலந்து கொண்ட மீனவர்கள் தெரிவிக்கையில், வெளிப்பகுதிகளில் இருந்து வரும் சிலர் சட்டவிரோதமான முறையில் மீன்களை சூறையாடுவதால், உள்ளூர் மீனவர்களின் நாளாந்த வருமானம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டனர். (எ)

## பணிப்புறக்கணிப்பு நிறைவுக்கு வந்தது: புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து

### தொழில் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 13

தொழிலாளர் பாதுகாப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து களுத்துறை கோட்ஸ் த்ரெட் நிறுவன ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு போராட்டம், தொழிலாளர் அமைச்சின் நேரடித் தலையீட்டினால் சுமுகமாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்று தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் அமைச்சில் களுத்துறை கோட்ஸ் த்ரெட் நிறுவனத்தினருடன் திங்கட்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த முக்கிய கலந்துரையாடலில், தொழில் ஆணையாளர் நாயகம் நதீகா வட்டலியத்த, கோட்ஸ் த்ரெட் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் இடைக்கம்பனி ஊழியர் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஜானக அதிகாரிய உள்ளிட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

களுத்துறை கோட்ஸ் த்ரெட் நிறுவனத்தில் சுமார் 500 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். தங்களது தொழில் பாதுகாப்பு உள்ளிட்ட சில முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தி, கடந்த 4ஆம் திகதி முதல் இவர்கள் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில், திங்கட்கிழமை தொழிலாளர் அமைச்சில் இடம்பெற்ற விசேட பேச்சுவார்த்தைகளை அடுத்து இந்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஜனாதிபதியின்...

இந்த அறிக்கை, நிலுவையில் உள்ள நீதிமன்றத் தீர்ப்பு குறித்த முன் அறிவு இருப்பது போன்ற தோற்றம், உணரப்பட்ட அல்லது உண்மையான நிர்வாகத் தலையீட்டின் ஆபத்து, நீதித்துறை நடுநிலைமை மீதான பொதுமக்களின் நம்பிக்கை சிதைவு ஆகிய கடுமையான கவலைகளை எழுப்புகிறது.

அத்துடன், தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னர், வரவிருக்கும் ஒரு குறிப்பிட்ட முடிவைக் குறிப்பிடும் துல்லியத்தன்மை, என்பன தீர்ப்பில் முறையற்ற செல்வாக்கு செலுத்தப்படலாம் என்ற நியாயமான அச்சத்தை உருவாக்குகின்றன.

இத்தகைய கருத்துக்கள் நீதித்துறையின் சுதந்திரத்தையும் நம்பகத்தன்மையையும் சீர்குலைக்கக்கூடும் என்று சிறிலங்கா சட்டவாளர்கள் சங்கம் முறைப்படி கவலை தெரிவித்துள்ளது.

இலங்கை அரசியலமைப்பு, நீதித்துறை சுதந்திரத்தை அரசின் அடித்தளக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கிறது.

குடிசார் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான அனைத்துலக உடன்படிக்கையின் 14ஆவது பிரிவு, சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற தீர்ப்பாயத்தால் நியாயமான விசாரணை அளிக்கப்படுவதை உறுதி செய்கிறது.

நீதித்துறையின் சுதந்திரம் குறித்த ஐ.நா.வின் அடிப்படைக் கோட்பாடுகள் (1985), நீதித்துறை முறையற்ற தலையீடுகளிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும், அரசு அதிகாரிகள் நீதித்துறை சுதந்திரத்தைக் குலைக்கும் செயல்களில் இருந்து விலகி இருக்க வேண்டும் என வலியுறுத்துகின்றன.

ஜனாதிபதியின் கூற்று, அது உள்நோக்கத்துடன் கூறப்படாவிட்டாலும், ஒரு நேரடித் தலையீடாகவும், அனைத்துலக தரநிலைகளின்படி முறையற்ற செல்வாக்காகவும் அமைகிறது.

நிலுவையில் உள்ள நீதித்துறை நடவடிக்கைகளைப் பாதிக்கக்கூடிய கருத்துகளை நிர்வாகம் வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

அனைத்துலக சட்டவியல் மற்றும் ஐ.நா. தரநிலைகள், மறைமுகமான அல்லது அடையாளப்பூர்வமான தலையீடு கூட பொது நம்பிக்கையைக் குலைக்கும் பட்சத்தில் அது ஒரு மீறலாக அமையக்கூடும் என்பதைத் தொடர்ந்து உறுதிப்படுத்துகின்றன எனவும் மேற்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ)

## சட்டம் அனைவருக்கும்...

செய்பவர்களுக்கு எதிராகச் சட்டம் பாரபட்சமின்றி நடைமுறைப்படுத்தப்படும் என ஜனாதிபதி இதன் போது உறுதிபடத் தெரிவித்தார்.

இதனிடையே, தற்போது சட்டம் தன் கடமையைச் செய்யும்போது, தம்மை சட்டத்துக்கு மேலானவர்கள் என கருதியவர்களால் அதனைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், எந்தவொரு விசாரணையிலும், ஒருவரது பெயர் குறிப்பிடப்பட்டால், அவரிடமிருந்து கட்டாயம் வாக்குமூலம் பெறப்படுவது கட்டாயம் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

வாக்குமூலம் வழங்குவதை ஒரு பேரழிவாகக் கருதும் கலாசாரம் இனி நாட்டுக்குத் தேவையில்லை என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கூறியுள்ளார். (அ)

## யாழ். பல்கலை...

அன்று, வீடுகள், மத வழிபாட்டுத் தலங்கள், பொது நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் அனைத்திலும், சுடரேற்றி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டிக்கவேண்டும் என, பல்கலைக்கழக மாணவர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்களுடன், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் இணைந்து, தமது அஞ்சலியை செலுத்தினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால், வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும், முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்படவுள்ளது. (அ)

## யாழ்.திருவள்ளுவர்...

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 2022.02.21 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தின் பிரகாரம் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையத்தைப் பேணிச் செல்வதற்காகக் கையொப்பமிடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, குறித்த கலாச்சார மத்திய நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்பாக தீர்மானமெடுப்பதற்கு ஒருங்கிணைந்த முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இவ் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கமைய கருத்திட்டம் நிர்மாணம் பூர்த்தியடைந்த பின்னர், இக்கலாசார மத்திய நிலையம் இலங்கை அரசாங்கத்தின் ஊடாக யாழ் மாநகர சபைக்குப் பாரப்படுத்தல் வேண்டும். அவ்வாறு பாரப்படுத்தப்பட்ட பின்னர், முகாமைத்துவப் பணிகளை மேற்கொள்வதற்காக நம்பிக்கைப் பொறுப்பு நிதியமொன்றை தாபிப்பதற்கு குறித்த தரப்பினர்கள் உடன்பாடு தெரிவித்துள்ளனர். அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள நம்பிக்கைப் பொறுப்புறுதி வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய, யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையத்தின் முகாமைத்துவ செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொண்டு செல்வதற்கான நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைத் தாபிப்பதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

## திருமலையில்...

சிறுவர் வைத்தியசாலைகள், புற்றுநோய் மற்றும் சிறுநீரக சிகிச்சை நிலையங்களின் சேவைகள் எக்காரணம் கொண்டும் பாதிக்கப்படாமல் இருப்பதை சங்கம் உறுதி செய்துள்ளது.

இவ்வாறான நிலையில், குறுகிய அரசியல் நோக்கங்களை முன்னிலைப்படுத்தி, வைத்தியர்களின் தொழிற்சங்கப் போராட்டமே இந்தச் சோகமான சம்பவத்துக்குக் காரணம் என குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருவதாக அச்சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

இந்தச் சிசு மரணம் தொடர்பில் முறையான தொழில்நுட்ப அறிவும் அனுபவமும் கொண்ட நிபுணர் குழுவைக் கொண்டு சுதந்திரமான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்குமாறு சுகாதார அமைச்சிடம் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

## அரசின் ஊழல்களை...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்று நாள்களின் பின்னர் அரசாங்கம் மிகவும் பலவீனமான முறையில் செயற்படும் என்று நான் குறிப்பிட்டேன். ஆரம்பத்தில் நான் மட்டும் தான் அரசாங்கத்தின் குறைகளை சுட்டிக்காட்டினேன். ஆனால் இன்று முழு நாடும் குற்றச்சாட்டுக்களை சுமத்துகிறது.

அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளை வெளிப்படுத்துவதால் திட்டமிட்ட வகையில் நெருக்கடிக்குள்ளாகியுள்ளேன். வாக்குமூலமளிக்க ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களுக்கும் அழைக்கப்படுகிறேன்.

ஊழல் மோசடிகள் பற்றி பொலிஸாருக்கும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கும் நாங்கள் தகவல் வழங்க வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

அரசாங்கத்தின் அனுசரணையுடன் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு தரப்பு ஊடாக எமக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. அச்சுறுத்தல்களுக்கு ஒருபோதும் அடிபணியப்போவதில்லை. அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளை தொடர்ச்சியாக வெளிப்படுத்துவேன்-என்றார். (அ)

## கிளிநொச்சி...

பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் அதிகாலை 5.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை ஒரே இடத்தில் குறித்த வாகனம் நீண்ட நேரமாக நிறுத்தப்பட்டிருந்ததை அவதானித்த பிரதேச மக்கள், இது குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார், காரை கைப்பற்றி மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஆரம்ப கட்ட விசாரணைகளின் அடிப்படையில், குறித்த வாகனம் வடக்கு பகுதிக்கு கொண்டு வரப்பட்டு கொள்ளைச் சம்பவம் அல்லது வேறு ஏதேனும் சட்டவிரோத செயல்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## துயரத்தை விதைக்கும்...

ஆட்சியே இன்று காணப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஸ்மார்ட் சமூக ஊடக செயற்பாட்டாளர்களுடன் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின்போது மின்சார கட்டணத்தை 33 வீதத்தினால் குறைப்போம் என்றும், 9,000 ரூபாய் கட்டணத்தை 6,000 ரூபாவாகவும், 3,000 ரூபா கட்டணத்தை 2,000 ரூபாவாகவும் குறைப்போம் என்றும் வீர வசனம் பேசிவிட்டு, தற்சமயம் பல கட்டங்களில் இந்த மின்சாரக் கட்டணங்களை அதிகரித்துள்ளனர். இதனால் உயர் மத்தியதர வர்க்கம், தொழில் முனைவோர், தொழிலதிபர்கள், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் என சமூகத்தில் பல தரப்பினரும் ஆபத்துக்கு ஆளாகி காணப்படுகின்றனர்.

மின்சாரக் கட்டண அதிகரிப்புகளால் உயர் மத்தியதர வர்க்கம், கைத்தொழிற்றுறையினர், தொழில்முனைவோர், மற்றும் நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களின் உற்பத்திச் செலவுகள் வேகமாக அதிகரித்து காணப்படுகின்றன. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52 வீதமானன பங்களிப்பைப் பெற்றுத் தரும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டிற்கு வருவதற்கு முன் குறித்த நாட்டில் காணப்படும் மின்சாரக் கட்டணங்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கின்றனர். இவ்வாறு மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படுவதனால் இலங்கையை தமது முதலீட்டு தளமாக கருதி இதுவரை செயற்பட்டு வந்த வெளிநாட்டு முதலீட்டாளர்களும் மனமுடைந்து போகிறார்கள்.

முதலீட்டாளர்களைப் பாதுகாத்து, ஏற்றுமதியை ஊக்குவிக்க வேண்டும் என்று தேர்தல் மேடைகளில் கோஷமிட்ட அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதி தலைமையிலான ஜேவிபி அரசாங்கம் கூறிய அனைத்து வாக்குறுதிகளையும் இன்று மீறிவிட்டது. சமூக வலைதளங்கள் வழியாக பொய்களை பரப்புவதை மாத்திரமே இந்த அரசாங்கத்தால் நன்றாக செய்ய முடியுமான விடயமாக அமைந்து காணப்படுகின்றன. அண்மைய அரசியல் வரலாற்றில் தோன்றிய மிகவும் அதிகமான பொய்களை கூறி மக்களை ஏமாற்றிய அரசாங்கமாக இந்த அரசாங்கம் மாறிவிட்டது.

தேர்தல் மேடை தோறும் 33 வீதத்தினால் மின்சார கட்டணத்தை குறைப்போம் என்று கூறியதை கேட்டும் நம்பியும் மக்கள் பெரும் நம்பிக்கையோடு இந்த அரசாங்கத்திற்கு வாக்களித்தனர். அன்று உருவான அந்த மகிழ்ச்சிப் பூரிப்பு தற்போதைய அரசாங்கத்தின் அலட்சியத்தால் இறுதியில் துயரமாகவே மாறியுள்ளது. இன்று மக்கள் தினசரி மூன்று வேளை உணவு உண்பது, பிள்ளைகளின் கல்வி மற்றும் சுகாதாரப் பாதுகாப்பது குறித்தும் பல சிக்கலான நிலைமைகள் எழுந்து காணப்படுகின்றன. இந்த பிரச்சினைகளுக்கு மத்தியில் அரசாங்கம் கிட்டிய காலத்தில் நீர் கட்டணங்களையும் அதிகரிப்பதற்கு பிரயத்தனப்பட்டு வருகின்றது-என்றார். (அ)

## இந்திய நிதியுதவி...

கையெழுத்திட்டு பரிமாறிக் கொண்டனர்.

இது 2026 ஏப்ரல் 19-20 ஆம் திகதிகளில் இந்திய துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்துடன் இணைந்து இடம் பெற்றது.

இத்திட்டத்தின் கீழ், முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் நவீன வசதிகள் மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்புகளுடன் கூடிய நான்கு மாடி மருத்துவ வார்டு வளாகம் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதில் லிப்ட் வசதி, குளிரூட்டும் அமைப்பு, மின்சார ஜெனரேட்டர் மற்றும் யு.பி.எஸ். அமைப்பு, தீ பாதுகாப்பு அமைப்பு மற்றும் குழாய் வழி மருத்துவ வாயு விநியோக அமைப்பு உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இந்த புதிய மருத்துவ விடுதி வளாகம், தொற்றாத நோய்கள் காரணமாக ஏற்படும் காலத்துக்கு முந்தைய உயிரிழப்புகளை குறைக்கும் நோக்கில், 35 வயதுக்கு மேற்பட்டோருக்கான பரிசோதனை விகிதத்தை குறிப்பிடத்தக்க அளவில் உயர்த்தவும், நோயாளிகளை பிற வைத்தியசாலைகளுக்கு மாற்றி அனுப்பும் தேவையை பெருமளவில் குறைக்கவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. திட்டம் நிறைவு பெறும் போது, வைத்தியசாலையின் படுக்கை பயன்பாட்டு விகிதம் 15 வீதத்துக்கும் அதிகமாக உயர்ந்து, மாவட்டத்தின் சுகாதார சேவைகள் குறிப்பிடத்தக்க அளவில் மேம்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## மக்களின்...

பின்னர் மகிந்த ராஜபக்ஷ அங்கிருந்து வெளியேறினார்.

மகிந்தவுக்கு ஆதரவு தெரிவித்து மொட்டு கட்சியினர் திரண்டிருந்தனர். இதன்போதே மனோஜ் கமகே மேற்கண்டவாறு கூறினார்.

“மே மாதம் என்பது பிரபாகரனின் கதையை முடித்த மாதமாகும். அதனால்தான் இந்த மாதத்தை குறிவைத்துள்ளனர். பிரபாகரனின் ஆத்மாவை சாந்தியடைய வைக்க ஆளுந்தரப்பு முயற்சிக்கின்றது.

மகிந்த ராஜபக்ஷ என்பவர் சிங்கம். பொய்யுரைப்பவர் அல்லர். குகைக்குள் அவர் ஓடி ஒளியவில்லை. வந்து வாக்குமூலம் வழங்கிவிட்டு சென்றார்.

திறைசேரியில் கொள்ளை அடித்தவர்கள், நிலக்கரி மோசடியுடன் தொடர்புடையவர்கள் உள்ளிட்டோரையும் இவ்வாறு அழைத்து வந்து விசாரிக்கவும்.

மகிந்த ராஜபக்ஷ என்பவர் இந்நாட்டு அரசியல் கலாசாரம். அவர்மீது கைவைத்தால் அழிவுதான் ஏற்படும்.” - எனவும் அவர் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# எரிபொருள் கியூ.ஆர். முறையை நீக்கும் திட்டம் அரசிடம் இல்லை!

## அமைச்சர் அநுர கருணாதிலக உறுதி

கொழும்பு, மே. 13

நாட்டில் தற்போது அமுலிலுள்ள கியூ.ஆர் குறியீடு அடிப்படையிலான எரிபொருள் விநியோக முறையை உடனடியாக நீக்கும் எண்ணம் அரசிடம் இல்லை என எரிசக்தி அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் விநியோகத்தில் தற்போது எவ்வித தட்டுப்பாடும் இல்லை எனவும், தடையின்றி விநியோகிப்பதற்குத் தேவையான எரிபொருள் கையிருப்பு ஏற்கனவே ஓடர் செய்யப்பட்டுள்ளது.

எரிபொருள் விலைகள் கணிசமாக அதிகரித்துள்ள நிலையில், தேவையற்ற எரிபொருள் நுகர்வைக் கட்டுப்படுத்துவது அவசியம். எரிபொருளுக்காக அதிகளவு அந்நியச் செலாவணி வெளியேறுவதைத் தடுப்பதற்கு இந்த முறையா னது ஒரு கட்டுப்பாட்டை வழங்குகிறது.

வரிசைகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கும், மக்கள் மத்தியில் பீதி கலந்த கொள்வனவைத் தடுப்பதற்கும் இந்த முறைமை உதவியாக உள்ளமை போன்ற காரணங்களால் கியூ.ஆர் முறைமை தொடரப்படும்.

எதிர்காலத்தில் எரிபொருள் கோட்டாக்களை அதிகரிப்பது குறித்து பரிசீலிக்கப்படலாமே தவிர, கியூ.ஆர் முறையை முழுமையாக நீக்கப் போவதில்லை.- என்றார்.

சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கியூ.ஆர் குறியீடுகளை முறையாகச் சரிபார்க்காமல் எரிபொருள் விநியோகிக்கப்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து பிரதி அமைச்சர் அர்க்கம் இலியாஸ் விளக்கமளித்தார்.

"எரிபொருள் விநியோக முறைமையை அமைச்சு தொடர்ச்சியாகக் கண்காணித்து வருகின்றது. விடுவிக்கப்பட்ட எரிபொருளின் அளவிற்கும், கியூ.ஆர் முறை மூலம் விநியோகிக்கப்பட்ட அளவிற்கும் இடையே பெரிய வேறுபாடுகள் காணப்பட்டால், அந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என அவர் எச்சரித்தார்.

# விடைத்தாள் பெற்றுக்கொள்ளும் உரிமை மாணவர்களுக்கு உண்டு

## மேன்முறையீட்டு நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு!

கொழும்பு, மே. 13

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், பரீட்சையெழுதிய மாணவர்கள் தமது விடைத்தாள்கள் மற்றும் புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமை உண்டு என மேன்முறையீட்டு நீதிமன்றம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது.

தமது பல்கலைக்கழக மாணவர் ஒருவரின் விடைத்தாள்களை வழங்க மறுத்து, இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு மனுவைத் தள்ளுபடி செய்து நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

2023ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற திறந்த பல்கலைக்கழக சட்டத்துறை போட்டிப் பரீட்சையில் தோற்றிய தனது மகளின் விடைத்தாள்கள் மற்றும் புள்ளிகளை வழங்குமாறு ஆர்.ஏ.ஜனக ரோஷான் ரணசிங்க என்பவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

பரீட்சை நடைமுறைகளின் இரகசியத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை பாதிக்கப்படும் எனக் கூறி பல்கலைக்கழகம் இந்தத் தகவலை வழங்க மறுத்தது.

எனினும், தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு விடைத்தாள்களை வழங்குமாறு உத்தரவிட்டது. இதனை எதிர்த்தே பல்கலைக்கழகம் நீதிமன்றத்தை நாடியிருந்தது.

நீதிபதிகள் ஆர்.குருசிங்க மற்றும் கலாநிதி சுமுது பிரேமச்சந்திர ஆகியோரைக் கொண்ட அமர்வு இந்தத் தீர்ப்பை வழங்கியது.

குறித்த தீர்ப்பில் ஒரு மாணவர் தானாக எழுதிய விடைத்தாளை அவரே பார்ப்பதற்கும், அதற்கு எவ்வாறு புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை அறிந்துகொள்வதற்கும் எவ்வித தடையும் இருக்க முடியாது.

"உயர் கல்வி நிறுவனங்கள் தகவல் ஒளிவுமறைவு விளையாட்டுகளில் ஈடுபட முடியாது" எனத் தெரிவித்த நீதிபதிகள், பொது நிறுவனங்களில் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக்கூறலும் மிக அவசியம் என வலியுறுத்தினர்.

பல்கலைக்கழகங்களின் உள்விதிமுறைகள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை விட மேலானவை அல்ல. ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படும் போது தகவல் அறியும் உரிமைச் சட்டமே மேலோங்கும்.

அரசியலமைப்பின் 14 ஏ உறுப்புரை மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் வெளிப்படைத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மதிப்பீடு செய்தவர்களின் அடையாளங்களை இரகசியமாகப் பேணிக்கொண்டு, மாணவர்களின் விடைத்தாள்களை மீளாய்வு செய்ய அனுமதிக்கலாம் என இந்திய மற்றும் இலங்கை முன்னுதாரணத் தீர்ப்புகளைச் சுட்டிக் காட்டிய நீதிமன்றம், பல்கலைக்கழகத்தின் மனுவைத் தள்ளுபடி செய்தது.

இந்தத் தீர்ப்பானது இலங்கையின் கல்வித் துறையில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதில் ஒரு மைல் கல்லாகக் கருதப்படுகிறது. (அ)

# 42 டெங்கு அபாய வலயங்கள் நாடு முழுவதும் அடையாளம்

கொழும்பு, மே. 13

நாடளாவிய ரீதியில் 42 பகுதிகள் டெங்கு நோய் பரவக்கூடிய அதி அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பதில் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 27,465 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

டெங்கு காய்ச்சலினால் இதுவரை 14 மரணங்கள் பதிவாகியுள்ளன.

தற்போது நிலவும் மழையுடனான வானிலையால், வரும் நாள்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

டெங்கு பாதிப்பு அதிகம் உள்ள மாவட்டங்களாக மேல் மாகாணத்தின் கொழும்பில் 5,930 பேரும், கம்பஹா 4,465 பேரும் மற்றும் களுத்துறையில் 1,572 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார். (அ)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு இல்லை!

யாழ்ப்பாணம், மே. 13

யாழ்.போதனா வைத்தியசாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு இல்லை எனவும் வைத்திய சேவை வழமை போல் நடைபெறுவதாகவும் மருந்துகள் தொடர்பில் மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்றும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வைத்தியசாலை தீ விபத்து தொடர்பில் உள்ளக விசாரணை இடம்பெறுகிறது. அதற்கு மேலதிகமாக பொலிஸாரும் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் அரச பகுப்பாய்வு திணைக் கள அதிகாரியும் விசாரணையில் ஈடுபட்டார். விசாரணைகள் முடிவடைந்ததும் சேத விவரம் தொடர்பாக அறிய முடியும் - என்றார். (அ)

# இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் நேற்று மகிந்த 2 1/2 மணித்தியாலம் வாக்குமூலம்

கொழும்பு, மே. 13

இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு விடுத்த அறிவித்தலுக்கு அமைய, நேற்று முற்பகல் அங்கு சென்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சுமார் இரண்டரை மணித்தியாலம் வாக்குமூலம் அளித்த பின்னர் அங்கிருந்து வெளியேறினார்.

சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு எயார்பஸ் வானூர்திகளை கொள்வனவு செய்தமை தொடர்பில் அந்த ஆணைக்குழு மேற்கொண்டு வரும் விசாரணைக்கு அமைவாகவே முன்னாள் ஜனாதிபதி நேற்று அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த கொடுக்கல் வாங்கலின் போது 2 மில்லியன் டொலர் நிதியை இலஞ்சமாகப் பெற்றதாக, அண்மையில் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த அந்த நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இதன்போது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மூன்று சந்தர்ப்பங்களில் 60 மில்லியன் ரூபா பணம் வழங்கப்பட்டதாக கபில சந்திரசேன தெரிவித்திருந்ததாக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு இதற்கு முன்னர் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தது.

அதன்படி, இந்தச் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்காக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவிற்கு வருகை தருமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமையவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பேராதனைப் பல்கலையில் பாலியல் துன்புறுத்தலை தடுக்குமாறு உத்தரவு

கொழும்பு, மே. 13

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பாலியல் துன்புறுத்தலைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அப்பல்கலைக்கழகத்தின் நியமன ஆணைக்குழுவுக்கு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் பல் மருத்துவ விரிவுரையாளராகப் பணியாற்றும் ஒருவர், தனக்குப் பாலியல் மற்றும் மன ரீதியான துன்புறுத்தல் ஏற்பட்டதாகக் குற்றம் சாட்டித் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனு மீதான தீர்ப்பை வழங்கும்போது மேல் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

இந்த மனு மீதான தீர்ப்பை, மேல் நீதிமன்ற நீதிபதிகள் பிரியந்த பெர்னாண்டோ மற்றும் அச்சலா வெங்கப்புலி ஆகியோரின் ஒப்புதலுடன் நீதிபதி ஜனக் டி சில்வா வழங்கினார்.

சுமார் 2017-ஆம் ஆண்டில், விரிவுரையாளராகத் தனது தகுதிகாண் காலத்திலும், முதுகலைப் பட்டப்படிப்பைத் தொடர்ந்து கொண்டிருந்தபோதும் அவர் பாலியல் மற்றும் மன ரீதியான துன்புறுத்தலுக்கு ஆளானதாக அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனு மீது தீர்ப்பளித்த மேல் நீதிமன்றம், முதல் பிரதிவாதியான பேராசிரியர் டபிள்யூ.எம். திலகரத்ன, எந்தவொரு பல்கலைக் கழகம், கல்வி நிறுவனம் அல்லது பிற கல்வி நிறுவனத்திலும் வேதனம் பெறும் அல்லது பெறாத எந்தவொரு கௌரவப் பதவியையும் ஏற்கத் தடை விதிக்க உத்தரவிட்டது.

பேராசிரியர் டபிள்யூ.எம். திலகரத்னவைத் தவிர, பல்கலைக்கழக ஆளும் குழு மற்றும் மேலும் ஒரு குழுவினர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media